# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
## இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (24.06.2023 முதல் 28.06.2023)

**அறிக்கைஎண் 050/2023** **தேதி.23.06.2023**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 27°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 38°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

### ஈரோடு மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

ஈரோடு மாவட்டத்தின் 20.06.23 முதல் 22.06.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 84 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 61 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 2-8 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

### ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவார வானிலை (20.06.2023 முதல் 22.06.2023) | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 28.06.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 20/06 | 21/06 | 22/06 | தேதி | நாள்-1 24/06 | நாள்-2 25/06 | நாள்-3 26/06 | நாள்-4 27/06 | நாள்-5 28/06 |
| 6.7 | 2.5 | 1.4 | மழை (மி.மீ) | 6 | 4 | 0 | 6 | 3 |
| 33 | 33 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 34 | 34 | 35 | 35 |
| 23 | 23 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 24 | 24 | 25 | 24 | 24 |
| 7 | 8 | 8 | மேக மூட்டம் (ஆக்டர்) | 8 | 5 | 6 | 8 | 8 |
| 78 | 77 | 84 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 59 | 56 | 61 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 40 |
| 2 | 8 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 12 | 6 | 10 | 8 |
| 230 | 270 | 180 | காற்றுவீசும் திசை | 270 | 270 | 270 | 270 | 250 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (24.06.2023 முதல் 28.06.2023)

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ முதல் 25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6-12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு திசைவரை வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபேட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| 24-06-2023 | 3.0 | 4.0 | 3.0 | 6.0 | 3.0 | 3.0 | 4.0 | 2.0 | 3.0 | 4.0 | 3.0 | 5.0 | 8.0 | 5.0 |
| 25-06-2023 | 2.0 | 2.0 | 2.0 | 4.0 | 2.0 | 2.0 | 3.0 | 2.0 | 2.0 | 3.0 | 2.0 | 3.0 | 6.0 | 3.0 |
| 26-06-2023 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 |
| 27-06-2023 | 3.0 | 4.0 | 4.0 | 6.0 | 5.0 | 4.0 | 5.0 | 3.0 | 3.0 | 6.0 | 4.0 | 6.0 | 4.0 | 5.0 |
| 28-06-2023 | 2.0 | 3.0 | 1.0 | 8.0 | 4.0 | 1.0 | 4.0 | 2.0 | 1.0 | 7.0 | 3.0 | 6.0 | 3.0 | 5.0 |

***வேளாண் அறிவுரைகள்***

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு லேசான தூறல் மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 6 -18 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது. முக்கியமாக திருப்பூர் மாவட்டத்தில் காற்றின் வேகம் அதிகபட்சமாக மணிக்கு 8 -18 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மழை எதிர்பார்க்கப்படுவதால் நீர்பாசனம் செய்வதை ஒத்தி வைக்கவும். மேலும் அனைத்து பயிர்களிலும் போதிய வடிகால் வசதியினை உறுதி செய்யவும். அதிகபடியான மழை நீரினை பண்ணைக்குட்டைகளில் வடித்து பின் தேவைப்படும்போது பயன்படுத்தலாம். |
| நெல் | **நடவு** | எதிர்பார்க்கப்படும் பகல் நேர வெப்பநிலை, நெல் நாற்றங்கால் மற்றும் நடவு செய்த வயல்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் தாக்குதலுக்கு ஏதுவாக உள்ளது. இதனை கண்காணித்து பொருளாதார சேத நிலைக்கு மேற்பட்டால் 5 சத வேப்பங்கொட்டை கரைசலை தெளிக்கலாம். |
| மக்காசோளம் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி ஒரு கிலோ மக்காசோள விதைக்கு 10கிராம் இமிடாகுளோபிரிட் 70S கலந்து விதைக்கலாம். |
| சோளம் | வளர் பருவம் | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி மானாவாரி சோளத்தில் தழைசத்து உரமாக எக்டருக்கு யூரியா 50 கிலோ இடவும். |
| சிறு குறு தானிய பயிர்கள் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி மேற்கு தொடர்ச்சி மலையோரப் பகுதிகளில் சிறு குறு தானிய பயிர்களை விதைக்கலாம்.<br>மேற்கு தொடர்ச்சி மலையோரப் பகுதிகளில் கனமழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளுக்கு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும். |
| நிலக்கடலை | வளர் பருவம் | 40 நாட்கள் வயதுடைய நிலக்கடலையில் எக்டருக்கு 400 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைக்கவும். |

| | | |
|---|---|---|
| கரும்பு | | மழையுடன் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும்.<br>பின்பட்டகரும்பு நடவு செய்யும் விவசாயிகள் நடவை தொடரவும். மேலும் ஏற்கனவே நடவுசெய்யப்பட்ட இடங்களில் சீரானபயிர் எண்ணிக்கை இருக்குமாறு பார்த்துக்கொள்ளவும். |
| பூசணிவகை கொடிப் பயிர்கள் | விதைப்பு | கடந்த வாரம் பெய்த மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையினைக் கொண்டு பாகல் மற்றும் பூசணிவகை கொடிப் பயிர்களுக்கு 1’×1’×1’ குழி எடுத்து ஆற விடவும். |
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மழையுடன் மணிக்கு 6 - 18 கி.மீ வரை வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும். |
| மஞ்சள் | வளர் பருவம் | கடந்த வாரம் பெய்த மற்றும் எதிர்பார்க்கப்படும் தூறல் மழையினை பயன்படுத்தி முப்பது நாட்கள் வயதுடைய மஞ்சளில் களை எடுக்கவும். |
| மல்லிகை | | தற்போது நிலவும் மிதமான வானிலையில் மல்லிகை செடிகளுக்கு 10 கிலோ தொழுஉரம் மற்றும் ஒரு செடிக்கு 60கிலோ, தழைச்சத்து 120 கிலோ மணிச்சத்து, மற்றும் 120 கிலோ சாம்பல்ச்சத்து என்ற அளவில் உரமிடவும். |
| தென்னை | | தென்னை மரத்தோப்பில் கிடைக்கும் மழையினை சேமிக்கும் வகையில் வட்ட பாத்தி அமைக்கவும். மேலும் 5 வயதிற்கு மேலுள்ள ஒரு மரத்திற்கு 650 கிராம் யூரியா, 1 கிலோ சூப்பர் பாஸ்பேட், 1 கிலோ பொட்டாஸ் கலந்து உரமிடவும். மேலும் ஒரு மரத்திற்கு நுண்ணூட்ட சத்து கலவை 250 கிராம் அளவில் மண்ணின் மேற்பரப்பில் இடவும். |
| கால்நடைகள் | | மாலை நேரத்தில் குறைந்த அளவு ஈரப்பதம் நிலவும் என எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளுக்கு குடிநீரை நான்கு முறை (80-100 லிட்டர்) பிரித்து கொடுக்கவும். |

## குறுஞ்செய்தி

- தென்னை மரத்தோப்பில் வட்ட பாத்தி அமைக்கவும். மேலும் 5 வயது மரத்திற்கு 650 கிராம் யூரியா, 1 கிலோ சூப்பர் பாஸ்பேட், 1 கிலோ பொட்டாஸ் மற்றும் 250 கிராம் நுண்ணூட்டம் இடவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**